பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை (01-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 197

## கிழக்கின் சில பகுதிகளில் தாக்குதல் சம்பவங்கள்

கொழும்பு, செப். 1

கிழக்கு மாகாணத்தில் கடந்த வியாழன், வெள்ளிக் கிழமைகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் ஒரு சிப்பாயும் ஒரு சிவிலியனும் கொல்லப்பட்டனர் என்றும்—

நான்கு சிப்பாய்களும் 2 பொலீசாரும் 3 ஊர்காவல் படையினரும் 5 சிவிலியன்களும் காயம் அடைந்தனர் என்றும் —

புலிகள் தரப்பில் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தெரிவித்தது.

திருகோணமலை, பரணமதவாச்சி என்ற இடத்திலேயே மூன்று புலிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

வாழைச்சேனைக்கு தென் கிழக்கே ஓட்டமாவடியில் படையினர் மீது கைக் குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். இரு

( 6ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ. நா.வுக்கு நேரடியாக முறையிடலாம்

### சர்வதேச ஒப்பந்தத்தை அரசு ஏற்றது

கொழும்பு, செப். 1

மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்படும் இலங்கை மக்கள் —

தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு உள்நாட்டில் பரிகாரம் காண முடியாது போகும் பட்சத்தில்—

ஐ நா. மனித உரிமைகள் குழுவுக்கு நேரடியாகவே முறைப்பாடு செய்து பரிகாரம் காண்பதற்கான வாய்ப்புக் கிடைக்க உள்ளது.

இது சம்பந்தமாக வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்படும் மக்கள் ஐ.நா. மனித உரிமைகள் குழுவுக்கு நேரடியாக முறைப்பாடு செய்யும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்று உண்டு.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் எனப்படும் குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை கேட்கின்ற உதவிகளை பிரிட்டன் தகுதி பார்த்து வழங்கும்

## ஆனால் புலிகளைத் தடைசெய்ய சட்டம் இல்லை கொழும்பு வந்த அமைச்சர் றிப்கின்ட் தெரிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 1

கடந்த பல ஆண்டுகளாக இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கு ஓரளவு உதவிகளை பிரிட்டன் அளித்து வந்துள்ளது. இலங்கை அரசிடம் இருந்து வரும் எந்த உதவிக் கோரிக்கையையும் அதன் தகுதியைப் பொறுத்து பிரிட்டன் பரிசீலனை செய்யும்.

நேற்று இலங்கை வந்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மல்கம் றிப்கின்ட் பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் போன்ற அமைப்பைத் தடைசெய்ய பிரிட்டனில் சட்டம் எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மல்கம் றிப்கின்ட் தமது 5 ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் ஓர் அங்கமாக நேற்று இந்தியாவில் இருந்து கொழும்பு வந்தார்.

அவரது கொழும்பு வருகையை முன்னிட்டு கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

பிரிட்டிஷ் அமைச்சர் விடுதலைப் புலிகளுக்கு தரகு வேலை செய்ய வந்திருப்பதாக சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் சமரசம் செய்து வைப்பது தமது விஜயத்தின் நோக்கம் அல்ல என்று பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவித்தார்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் போது இது குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இதன் பின்னர் பிரிட்டிஷ் அமைச்சர்பி. பி. ஸிக்கு பேட்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை காங்கேசன் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், செப். 1

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை நடைபெறவிருக்கிறது.

யாழ் சிவில் நிர்வாக அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்தவர்களில் கீழ்வரும் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு உடனடியாக வந்து பெயர்களைப் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:

★ பட்டியல் 36 இலிருந்து பட்டியல் 54 வரை உள்ளோர்.

★ நோயாளிகள்

★ அரசாங்க உத்தியோகத்தர்கள்.

★ திறந்த பல்கலைக் கழக மாணவ, மாணவிகள்.

★ வெளிநாடு செல்பவர்கள்.

600 பயணிகள் மட்டுமே பயணம் செய்ய முடியும் என்பதால் முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது. (இ-3)

## அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகம் கிளிநொச்சியில் மோசம்

### 4,000 தொன்னுக்கு பதிலாக 290 தொன்னே வந்தன

யாழ்ப்பாணம், செப். 1

கிளிநொச்சியில் இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கென அத்தியாவசிய ஆணையாளர் திணைக்களத்திடம் இருந்து 4 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வரவேண்டியுள்ள போதிலும், கடந்த வாரம் வரை 100 மெற்றிக் தொன் அரிசியும், 190 மெற்றிக் தொன் மாவுமாக மொத்தம் 290 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்களே வந்து சேர்ந்துள்ளன.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லைநடராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் எதுவுமே தற்போது கையிருப்பில் இல்லை.

இதனால் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உணவு விநியோகம் மேமாதம் தொடக்கம் உரிய முறையில் விநியோக ஒழுங்கின்படி நடைபெறவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

தெற்கில் வெள்ளவாயா, குட்டிகல பகுதிகளில் தேடுதல் நடத்திய பொலீஸார் ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

இது தொடர்பாக சிலரை பொலீஸார் கைது செய்துள்ளனர். (இ-3)

## அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாதீர்மானம்

### ஐ. தே. கட்சி சமர்ப்பித்தது

கொழும்பு, செப். 1

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான பிரேரணை ஒன்றை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே க. சமர்ப்பித்துள்ளது.

புத்தளம் சிமெந்துக்கம்பனி தொடர்பாக 23-03-95 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தை நீக்குவதற்கு 3 கோடி ரூபாவை அமைச்சர் ஒருவரும், அலுவலர் ஒருவரும் இலஞ்சமாகப் பெற்றனர் எனக் கூறி வெளிநாட்டமைச்சர் 19-01-96 இல் ஜனாதிபதிக்குக் கடிதம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 22 மன்னார் அகதிகளுடன் கரை ஒதுங்கிய படகு!

### ஊர்காவற்றுறையில் சம்பவம்

கொழும்பு, செப். 1

தமிழ் நாட்டுக்கு 22 அகதிகளுடன் கடலில் சென்று கொண்டிருந்த படகொன்று சீரற்ற காலநிலை காரணமாக ஊர்காவற்றுறையில் கரை ஒதுங்கியது.

கரை ஒதுங்கிய இந்தப்படகில் இருந்த 22 பேரும் தற்சமயம் ஈ. பி டி. பியினரின் பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது,

மன்னார், பேசாலையில் இருந்து கடந்த செவ்வாய்க் கிழமை தமிழகத்துக்கு இவர்கள் புறப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலரிடம் இவர்களை ஒப்படைக்க ஏற்பாடாகியிருந்தது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக்குழு

# நல்லைக்குமரன் மலர் 1996

தாங்கவொண்ணா துன்பங்கள், துயரங்கள், இடர்கள், இன்னல்கள் தலையெடுத்த காலத்தும், தளர்வுறாத தொன்மைமிகு சமயமாகிய சைவம், நற்றமிழ், சிவதர்மம் ஆகியவை வளர்ந்தோங்க வேண்டும் என்ற நோக்கோடும், இளைய தலைமுறையினரிடையே சமய அறிவினையும், இறை பக்தியையும் ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் பொருட்டும், இவ்வாண்டு எமது குழுவினால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா **02-09-96** ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 9-00 மணிக்கு (பழைய நேரம்) நாவலர் மண்டபத்தில் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலத்தின் தேவைக்கேற்றவாறு பல்வேறுபட்ட அறிஞர்களின் கருத்தாழம் மிக்க கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி நறுமணம் பரப்பும் மலராக மலர்ந்திருக்கும் நல்லைக்குமரன் மலரினை வெளியீட்டு விழாவின்போதும், அதனைத் தொடர்ந்தும் பின்வரும் நிலையங்களிலும் பெற்றுப் படித்துப் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநக்ராட்சி மன்றம்.

01-09-1996.

விற்பனை நிலையங்கள்:

1. நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மேற்கு வீதியிலுள்ள மாநகரசபையின் உப அலுவலகம்.
2. நல்லூரிலுள்ள மாநகரசபையின் இந்து விடுதி அலுவலகம்.
3. பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்திருக்கும் மாநகரசபையின் முதலுதவிச் சிகிச்சை நிலையம்.
4. கண்டிவீதி, சுண்டிக்குளியிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம்.

(சி-2830)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும், வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 15 — 04 — 1923



மறைவு: 04 — 08 — 1996

### திருமதி இ. பூரணம்

(முனியப்பர் கோயிலடி, ஏழாலை வடக்கு, ஏழாலை)

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மானிலத்தே! இல்லை அம்மா இல்லை. நாம் தான் உன் அருகில் வரவேண்டுமே ஒழிய நீங்கள் எம் அருகில் வரமாட்டீர்கள் அம்மா! அம்மா! குடும்பச் சுமை பெரிதாக இருந்தும் உன் பிள்ளைகளை மனம் கோணாது அவ்வப்பொழுது அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அன்பாகவும், பண்பாகவும், சீராகவும் வளர்த்து அவர்களுக்கேற்ற துணைவர்களையும், துணைவிகளையும் நீங்களே முன்னின்று தேர்ந்தெடுத்து பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளையும் கண்டு, இறுதியில் சில நாள்கள் நோய் வாய்ப்பட்ட பொழுதும் உங்கள் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும், பூட்டப்பிள்ளைகளையும் அடிக்கடி கேட்டு, அவர்களின் நலன்களிலும் அதிக கரிசனை கொண்டீர்களே! எம்மையெல்லாம் விட்டு, வெகு விரைவில் விடைபெறப் போகின்றேன் என்று உங்களுக்கு முன் கூட்டியே தெரிந்து விட்டதா அம்மா! எம் உயிர் இருக்கும் வரை உம் நினைவு இருக்கும் அம்மா! இது உறுதி.

04-08-96 இல் மரணமடைந்த எமது தாயாரின் இறுதிக் கிரியைகளின் போது எமது துன்பத்தில் கலந்து கொண்டு, உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக மல்லாகத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமார், கிருஷ்ணமோகன், ஏழாலை வடக்கைச் சேர்ந்த ந. தங்கராசா. சி. கந்தசாமி ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை 03-09-96 இல் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்பு விட முடியாமைக்கு வருந்துகிறோம்.

(பகல் **2.00** மணிக்கு முன் சமுகம் தரவும்)

தகவல்:
மூ. தருமமூர்த்தி (கிளி)
து. தவமணி,
பா. இரஞ்சினிதேவி,
த. மோகனராணி.
(பிள்ளைகள்)

ஏழாலை கிழக்கு, ஏழாலை.
(இசிதோர் தேவாலயத்திற்கு அருகில்)

(42511)

## ஆசிரிய பயிற்சி மாணவருக்கு

1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து ஆசிரிய பயிற்சி மாணவர்களையும் எதிர்வரும் 03-09-96 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கலாசாலையில் தன்னைச்சந்திக்கும்படி கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

## பல்கலைக்கழக மாணவருக்கான பயண ஒழுங்கு

கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு ஆகிய பல்கலைக்கழகங்கள், நாவல திறந்த பல்கலைக்கழகம், வவுனியா கல்விக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்கின்ற மாணவர்களும், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் நாளை கப்பலில் கொழும்பு செல்வதற்கு பயண ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மகஜரில் கையொப்பம் இட்ட 52 மாணவர்களும் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் சலந்து பெயர்களை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. [இ-3]

## உள்ளக பயிற்சி பெறும் மருத்துவருக்கு

யாழ்ப்பாணம்,செப். 1

உள்ளகப் பயிற்சி பெற உள்ள மருத்துவர்கள் தங்கள் பயிற்சி நிலையத்தை தெரிவு செய்யுமுகமாக நிரப்ப வேண்டிய படிவத்தை, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் பெற்று நிரப்பிக் கையளிக்கும் படி வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி என். கனகரத்தினம் கேட்டுள்ளார்.

நாளை திங்கள் மாலை ஒரு மணிக்கும் 5 மணிக்கும் இடையில் அவரது பணிமனையிலேயே இதனைப் பெற்று நிரப்பிக் கொடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)


## AL 97, 98

கிறிஸ்தவம்
Mrs. A, மல்லிகா

தமிழ்
Mr. ஜெயநிதி

## புலமைப் பரிசில்' 97

பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. தற்பொழுது ஆண்டு 4 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்குரியது.

**SHAMROCK**
யா/ஈச்சமோட்டைவீதி.
(மறவகுளத்திற்கு அருகில்)
(42517)


## தவறிவிட்டது

தர்மலிங்கம் சிவமோகன்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஆகிய எனது 692720202X இலக்க தேசிய அடையாள அட்டையும், பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டையும், கறுப்பு நிற PURSE உடன் 2 மாதங்களுக்கு முன் திருநெல்வேலி சந்தையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் 60, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [illegible]

(42507)

## அராலிக் கடலில் சடலங்கள்

அராலிக் கடல் நீரேரியில் பொன்னாலைப் பாலத்துக்கு சமீபமாக கடந்த வியாழனன்று இரு ஆண்களின் சடலங்கள் அழுகிய நிலையில் கரை ஒதுங்கின.

இரு சடலங்களும் அப்பகுதி மக்களால் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டுவிட்டன என்றும்—

மேலும் சில சடலங்களும் கடலில் மிதப்பதாகவும் மீனவர்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-12)

உ

மல்லாகம்

## பழம்பதி விநாயகர் ஆலய அலங்காரோற்சவ விஞ்ஞாபனம்

நிகழும் தாத்ரு ஸ்ரீ ஆவணி மீ 18 ஆம் நாள் (02-09-96) திங்கட்கிழமை ஆரம்பமாகி 29 ஆம் நாள் (13-09-96) வெள்ளிக்கிழமை மகேஸ்வர பூசைகளோடு நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது.

காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்வுற்சவங்கள் பிற்பகல் 3 மணியளவில் தினமும் நிறைவு பெறும்.

மாவை ஆதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களின் அருளாசியுடன் ஆரம்பமாகும் உற்சவங்களில் வழமைபோல அடியார்கள் அபிஷேக ஆராதனைகளில் பங்கு கொண்டு எம் பெருமானின் திருவருளை வேண்டிச் செல்லவும்.

உபயகாரர்கள்

(சி/2829)

## கண்ணீர் அஞ்சலி

எமது வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் பொது முகாமையாளர்
திரு.க. இராசையா
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கந்தையா தங்கம்

அவர்கள் 31-08-96 ஆம் திகதி சனிக்கிழமை சிவபதமடைந்த செய்தி எம்மையெல்லாம் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்திவிட்டது. அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலிகாமம் ப.தெ.வ. அ. கூ. ச.
கொத்தணியின்
பணிப்பாளர்கள்/ பணியாளர்கள்

(42513)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா தங்கம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கராச்சடி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தங்கம் 31-08-96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னமணி, காலஞ்சென்ற செல்வநாயகம், காலஞ்சென்ற அரியமலர், மணிராசா, இராசையா (பொதுமுகாமையாளர், வலிகாமம் ப.தெ. வ.அ.கூ.ச. கொத்தணி) ஜெயமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராசா (பொதுமுகாமையாளர், சங்கானை ப.தெ.வ.அ.கூ. சங்கம்), கமலாதேவி, சற்குணதேவி (லிகிதர், ப.தெ.வ.அ கூ. சங்கம், மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 01-09-96 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. இராசையா
(மகன்)

கராச்சடி,
சண்டிலிப்பாய்.

(42515)

### ஆறுமுகம் தெய்வேந்திரன்

(கூட்டுறவுப் பரிசோதகர்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆறுமுகம் தெய்வேந்திரன் (கூட்டுறவுப் பரிசோதகர், மயூரன் தேநீர்ச்சாலை உரிமையாளர்) 28-08-96 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் யாமினி, யாழினி, கிரீஷா, அபிரா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. திருமதி ஆறுமுகம்-அன்னம்மாவின் அன்பு மகனும், அமரர் பொன்னம்பலம்- நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-09-96) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் களத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தெ. சகுந்தலாதேவி
(மனைவி)

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(42516)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்-குர்டிஷ் படைகள் வட ஈராக்கில் சண்டை!

பாக்தாத், செப். 1

ஈராக்கிய படைகள் வட ஈராக்கில் உள்ள குர்டிஷ்பகுதியில் நேற்று தாக்குதலை ஆரம்பித்ததை அடுத்து குர்டிஷ் படைகளுக்கும் ஈராக்கிய படைகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குர்டிஷ் பகுதியைச் சேர்ந்த இரு போட்டி ஆயுதக்குழுக்கள் கடந்த இரண்டு வார காலமாக சண்டையிட்டு வந்தனர். இந்த இரு போட்டிக் குழுக்களுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் லண்டனில் இரு தரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பமாக இருந்த சமயம் ஈராக்கிய படைகள் வடஈராக்கில் உள்ள குர்டிஷ் பகுதி மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

கடந்த ஒரு வாரகாலமாக வட ஈராக்கில் ஈராக் படைகளின் நடமாட்டம் இருந்தது அவதானிக்கப்பட்டு வந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இப்பகுதிக்கு கூடுதல் துருப்புக்களையும் விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றையும் அனுப்புவது குறித்து அமெரிக்கா ஆலோசித்து வருகிறது

1991 வளைகுடா யுத்தத்தை அடுத்து குர்டிஷ் பகுதி துண்டாடப்பட்டது தெரிந்ததே. (இ- 3)

## செச்சின்ய போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவிப்பு

குறொஸ்னி, செப். 1

ரஷ்ய பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்சாந்தர் லெபேட்டும், செச்சின்யப் பிரிவினைவாத கிளர்ச்சிப் படைகளின் தளபதி ஜெனரல் மார்கடோவும் இருபது மாத செச்சின்யப் போரை முடித்துக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

ஆனால் அந்தக் குடியரசின் அரசியல் நிலை 2002 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்படும் என்று லெபேட் கூறினார்.

சண்டை நிறுத்தத்துக்கு வழி செய்த அவர் நிலையான அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் போர் அதிகார பூர்வமாகக் கைவிடப்படுகிறது என்றார். (இ-3)

## ஹொங்கொங்கிலிருந்து விலகும் பணி ஆரம்பம்

பீஜிங், செப். 1

அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து சீனாவிடம் ஹொங்கொங் ஒப்படைக்கப்படுவதை அடுத்து ஹொங்கொங்கில் இருந்து விலகும் பணியை பிரிட்டிஷ் துருப்புக்கள் நேற்று ஆரம்பித்தன.

பிரிட்டிஷ் தளபதி மேஜர் ஜெனரல் பிரியான் றுட்டன் இதற்கான கால அட்டவணை ஒன்றை வெளியிட்டுள்ளார்

2 ஆயிரத்து 350 அதிகாரிகள் தங்கள் பொறுப்புக்களை ஹொங்கொங்கில் உள்ள பிரிட்டிஷ் தலைமையகத்திடம் ஒப்படைப்பதும் இந்தப் பணியில் அடங்கும். (இ-3)

## 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டு தங்க நாணயங்கள்

### மகாராஷ்டிரத்தில் கண்டுபிடிப்பு

புதுடில்லி, செப். 1

மகாராஷ்டிரத்தில் 7 ஆவது மற்றும் 8 ஆவது நூற்றாண்டு காலத்து நூற்றுக்கு மேற்பட்ட தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஒரு தொழிலாளி தமது பண்ணை நிலத்தைக் கொத்திக் கொண்டிருந்த போது இந்த நாணயங்களைக் கண்டெடுத்தார்.

பகவான் விஷ்ணு, கணேசா, லக்ஷ்மி தேவியார், சிவபெருமான் மற்றும் பார்வதிதேவி ஆகியோரின் உருவங்கள் இந்த நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் தேவனாகிரியின் எழுத்துக்கள் உள்ளன. (இ-3]

## முன்னாள் அமைச்சருக்கு பிணை அனுமதி மறுப்பு

மாநில காவல் துறையின் ஊழல் தடுப்புப் பிரிவினரால் இரண்டு வழக்குகளில் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் இருக்கும் முன்னாள் அமைச்சர் செல்வக்கணபதியை பிணையில் விடுவிக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் மறுத்து விட்டது.

இந்த வழக்குகளின் விசாரணை இன்னமும் நடைபெற வேண்டியிருப்பதால் குற்றஞ் சாட்டப் பட்டவரை பிணையில் விட இயலாது என்று நீதிபதி இராமமூர்த்தி தெரிவித்தார்.

பொது நலனைப் புறக்கணித்து கொடைக்கானல் ஹோட்டல் ஒன்றுக்கு அனுமதி அளித்ததில் முன்னாள் அமைச்சருக்கு பங்கு இருப்பதை பூர்வாங்க ஆதாரங்கள் காட்டுகின்றன என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் கூறினார்.

இந்த விடயத்தில் தம்மை எவரும் கேள்வி கேட்க முடியாது என்ற நினைப்பில் குற்றஞ் சாட்டப் பட்டவர் செயற்பட்டிருக்கிறார் என்றும் நீதிபதி கருத்துக் கூறினார். (இ-3)

# சசிகலாவை பிணையில் விட்டால் நீதியின் பிடியிலிருந்து தப்பிவிடுவார்

### மனுவை நிராகரித்து நீதிவான் கருத்து

சென்னை, செப் 1

தற்போதைய நிலையில் திருமதி சசிகலாவை பிணையில் விட்டால். நீதியின் பிடியில் இருந்து அவர் தப்பித்து விடுவார் என்றும்—

சாட்சியங்களை கலைத்து புலனாய்வுக்கு ஊறு விளைவிப்பார் என்றும்—

தனிநபர் சுதந்திரத்தை விட நாட்டின் நலனே பெரிது என்றும் — சென்னை நகர மாஜிஸ்திரேட் திரு. எஸ். முத்துச்சாமி தெரிவித்தார்.

அந்நியச்செலாவணி மோசடி தொடர்பாக மேலும் ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருக்கும் சசிகலாவை பிணையில் விடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணையிலேயே மாஜிஸ்திரேட் முத்துச்சாமி இப்படித் தெரிவித்தார்.

பிணை மனுவை நிராகரித்து அவர் தீர்ப்பு வழங்கினார். (இ-3)

## உலக அரங்கில்

### சுக்ராமின் மகன் மீது விசாரணை

புதுடில்லி, செப்.1

முன்னாள் மத்திய அமைச்சர் சுக்ராமின் வீட்டில் பெருமளவு ரொக்கமும், நகைகளும் கைப்பற்றப்பட்டதை அடுத்து அவரது மகனும், ஹிமாலயப் பிரதேச அமைச்சருமான அனில் சர்மாவை புதுடில்லியில் மத்திய புலனாய்வுப் பிரிவு விசாரணை செய்தது.

இந்த விசாரணை சுமார் 7 மணி நேரம் நடந்தது.

இதற்கிடையே — தமது இல்லங்களில் கைப்பற்றிய பணம் தம்முடையது அல்ல என்று சுக்ராம் தெரிவித்தார்.

லண்டனில் தங்கியுள்ள அவர் செய்தி ஏஜென்ஸிகளிடம் இத்தகவலைத் தெரிவித்ததுடன். தாம் ஒரு வார காலத்தில் இந்தியா திரும்ப இருப்பதாகவும் கூறினார்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பு அதிகாரி ராமராவின் ஜாமின் கோரும் மனுவை புதுடில்லி நீதிபதி தள்ளுபடி செய்தார். (இ-3)

### மலேசியாவில் நிலச்சரிவு

கோலாலம்பூர், செப். 1

மலேசியாவில் இடம்பெற்ற நிலச்சரிவில் 11 பேர் கொல்லப்பட்டனர். 37 பேரைக் காணவில்லை. (இ-3)

## பிலிப்பீன்ஸ் பிரிவினைவாத கிளர்ச்சி முடிவுக்கு வந்தது

### ஜகார்த்தாவில் ஒப்பந்தம்

மணிலா, செப். 1

தென் பிலிப்பீன்ஸின் பிரிவினைவாத போராட்டத்துக்கு முடிவு கட்டும் அமைதி உடன் பாடு இந்தோனேசியத் தலைநகரான ஜகார்த்தாவில் நேற்று முன்தினம் கைச்சாத்தானது.

அரசாங்க தரப்பினரும், பிரிவினைவாதத் தரப்பினரும் நான்கு நாள்களாக பேசி ஒப்பந்தம் செய்ய முன்வந்தனர்.

எல்லாப்பிரச்சினைகளுக்கும் உடன்பாடு ஏற்பட்டதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி மூன்று ஆண்டு காலத்துக்கு அமைதி முன்னேற்றமன்றம் ஒன்று செயற்படும்.

அதன் பிறகு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மின்டானோவின் 14 பிரதேசங்களுக்கும் தன்னாட்சி நிர்வாகம் அமைக்கப்படும். (இ-3)


ST. JOHN'S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA

ADMISSION - 1997

01. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. ஆண்டு 1, ஆண்டு 6.
02. (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 02-09-1996 முதல் 14-09-1996 வரை பெற்றுக் கொள்ளலாம்.
(ஆ) எக்காரணம் கொண்டும் 14-09-1996 - க்குப் பின் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படா.
(இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
(ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-09-1996 அத் திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.
03. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
04. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
05. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆண்டு ஒன்றுக்கான படிவத்திற்கு ரூபா 150/- ஆண்டு ஆறுக்கான படிவத்திற்கு ரூபா 200/- செலுத்த வேண்டும்.
07. வயதெல்லைகள்:
(அ) ஆண்டு ஒன்று - விண்ணப்பதாரி 01-02-91 க்கும் 31-01-92 க்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
ஆண்டு ஆறு - விண்ணப்பதாரி 01-02-86 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
08. பிரவேசப் பரீட்சை: ஆண்டு ஆறு வகுப்புக்கு 19-10-1996 காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும்.
09. ஏனைய வகுப்புகளுக்கான விண்ணப்பங்களும் பிரத்தியேகப் படிவங்களில் இதே நாள்களில் ஏற்றுக் கொள்ளப்படும். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும். விவரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.
10. ஆண்டு 4 முதல் ஆண்டு 12 வரையிலான பரி. யோவான் கல்லூரி மாணவருக்கு இவ்வாண்டு 3 ஆம் தவணையிலிருந்து விடுதி வசதிகள் உள.

விண்ணப்பங்கள் 25 - 09 - 96 வரை ஏற்கப்படும்.

அதிபர்கள்.

(சி-2719)



நிரு ரியுசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

G. A. Q, B. A
யாழ், பேராதனை

இந்து நாகரிகம்

திரு. சிவமகாலிங்கம்
விரிவுரைகள் ஆரம்பம்: 2 – 9 – 96
திங்கள் 3 மணி
(42491)



நிரு ரியுசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 98

இரசாயனவியல்

திரு. A. மகாதேவா
ஆரம்பம்: 02 - 09 - 1996 திங்கள்
பிற்பகல் 3-00 மணி
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(4490)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நுணாவில் / சரசாலை வீதியில் (நுணாவில் சந்தியிலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில்) 18 பரப்பு காணியில் தென்னை, பலா, மா, பனை உள்ள இரு வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.D.S. ஆனந்தம், மகிழடி ஒழுங்கை, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (42506)

### என்வலப் விற்பனைக்கு

ஊனமுற்ற பிள்ளைகளினால் தயாரிக்கப்படும், மருத்துவக் கடிதவுறை (Medical Envelopes) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், 15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (சுண்டுக்குளி மகளிர் பாடசாலைக்கு முன்) (42426)

### தேவை

டீசல் மின்சார இயந்திரம் 5K.w ஜெனரேட்டர் உடன் தேவை. தொடர்பு கொள்க, துர்க்கா தேவி தேவஸ்தானம், சாவகச்சேரி. (42464)

### புத்தகப் பிரியர்களே!

தரமான தமிழ் - ஆங்கில நூல்களை இரவல் பெற்று வாசித்து மகிழ விஜயம் செய்யுங்கள், லிங்க் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (42413)

### பாலர் ஆசிரியராக

தபால் வழியில் பாலர் ஆசிரியர் பயிற்சி — க. பொ. த (சா/த) கடைசித் தகைமையாகும். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: திரு. வீ. கே. கந்தசாமி, 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42437)

### ஆங்கிலக் கல்வி

சுலபமான முறையில் மூன்று மாத காலத்திற்குள் ஆங்கிலம் பேசப் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி. C/o ஜெயந்தி ஸ்ரோர்ஸ், இல: 426 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், (வண்ணார் பண்ணை சிவன் சந்தி.) (42485)

### ஆங்கிலம், கணிதம்

O/L 96; ஆண்டு 8, 9, 10 மாணவர்கட்கும் தவணைப் பரீட்சையில் மிக உயர்ந்த பெறுபேறுகளுடன் சித்தியடைய அனுபவமுள்ள B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி (சிவன் கோவில் பின்புறம்) திருநெல்வேலி. [42453]

### மீண்டும் ஆரம்பம்

குழந்தைகள், முதியவர்கள் அனைவருக்கும் சிறந்த சிகிச்சையளிக்கின்ற இல. 129, ஸ்ரேஷன் றோட் இரெட்ணம் வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் தனது பழைய இடத்திலேயே சேவையைத் தொடர்கிறது என்பதை அறியத் தருகிறோம். (42236)

### மீண்டும் ஆரம்பம்

எமது வைத்திய நிலையம் கோண்டாவில் பஸ்டிப்போ சந்திக்கருகில் பழைய இடத்தில் இயங்குகின்றது. டாக்டர் பேரம்பலம் பத்மநாதன். (42499)

### திருமண சேவை

இலங்கை, நோர்வே என்ஜினியர்களுக்கு மணப்பெண்களும், சீதனம் நிறைந்த பெண்களுக்கு அரச, கூட்டுத்தாபன மணமகன்களும் தேவை. சந்திப்பு பிற்பகலில். குசிபிள்ளை ''வரோதயன்'' திருவீதி, உரும்பராய் வடக்கு, (பிரதேசசபை அருகில்) (42505)

### தவறிவிட்டது

487752525 X இலக்க தேசிய அடையாள அட்டை கோவில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். அ. செல்வராணி, இல: 46/2. ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (42494)

### புலமைப் பரிசில் - 96

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை 12 ஆவது 01-09-96 ஞாயிறு, 13 ஆவது (இறுதி) 05-09-96 வியாழன் வெளியிடப்படும். பரீட்சை 6 பிரிவுகளில் நடைபெறுகின்றது. புதிய நாவலர் கல்வி நிலையம், (ஆனைப்பந்திச் சந்திக்கும், இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்) நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42496)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 05-08-1919



விண்ணில்: 19-07-1996

## திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை

அன்பின் உறைவிடமாகவும், பாசத்தின் திருவுருவாகவும், எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் சுடர் வீசிய அணையாத தீபமாகிய அம்மாவே, மாமியே, அப்பம்மாவே, அம்மம்மாவே, பூட்டம்மாவே நீங்கள் எங்கள் எல்லோரையும் மண்ணில் தவிக்க விட்டு விண்ணுலகு அடைந்தீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கவுணாவத்தை வைரவப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி!

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
கவுணாவத்தை,
கருசம்பனை.

தற்காலிக முகவரி:
கோயில் வளவு,
சண்டிலிப்பாய்.

42498)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 — 11 — 1939



உதிர்வு: 12 — 09 — 1995

## அமரர் செல்லையா சிவராசா

(மதுவரி உத்தியோகத்தர்)

ஓராண்டு கழிந்ததையா
ஒளிமுகம் மறைந்ததையா
நீர் வளர்த்த எமதுடம்பு
இம் மண்ணில் இருக்கும் வரை
உம் நினைவை மறக்குமோ
கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சிக்கிறோம், எந்நாளும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

''அமுதசுரபி''
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

(42420)

---

## புகைப்பட ரசிகர்களுக்கு அரியசந்தர்ப்பம்!

நல்லைக்கந்தன் திருவிழாவை முன்னிட்டு

# - குறைந்த சலார் -

| | | | |
|---|---|---|---|
| தேசிய அடையாள அட்டை | ரூபா | 50-00 | — 3 பிரதிகள் |
| அடையாள அட்டை | ரூபா | 100-00 | — 3 பிரதிகள் |

**28-08-1996** தொடக்கம் **15-09-1996** வரை

## சித்திரகலா படப்பிடிப்பாளர்

3, செட்டித்தெரு லேன், நல்லூர்.

(42445)

---

## அஷ்டலக்ஷ்மி தினத்தாள் 1997

**மேலும் புதிய விவரங்கள்: 63 நாயன்மார்களின் குருபூசைகள், கிறிஸ்தவ திருநாட்கள்**

சிறந்தவைகளையே நாடும் நீங்கள் உங்கள் அமோக ஆதரவால் எங்களை வாழ்வித்தீர்கள், நன்றி.

தயாரிப்பு துறையில் புது அம்சங்களைப் புகுத்தி வாடிக்கையாளர்களின் தேர்வில் முதன்மை பெறும் அஷ்டலக்ஷ்மி தினத்தாள் உங்கள் வாழ்வின் ஒரு முக்கிய அம்சம்!

1996 ஆம் ஆண்டு தினத்தாள் பரிசுப் போட்டியில் 8 கிறாம் தங்கமோதிரம் பெறுபவர்

**வி. மாணிக்கவாசகர்**

கன்னன்குடா, மட்டக்களப்பு

எதிர்பாருங்கள்!

பரிசுமழை திருக்குறள் புதிர் போட்டி
ரூபா 10,000/- (பத்தாயிரம்)

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், கைதடி.

காட்சிக்கூடம்

320, செட்டியார் தெரு, கொழும்பு - 11

அழைப்பு:- **334004** (42504)

---

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் தெய்வேந்திரன்

(உரிமையாளர்: ஆறுமுகம் தேநீர்சாலை, மயூரன் தேநீர் சாலை)

மன்ற உறுப்பினரும், கணக்காய்வாளருமான

ஆறுமுகம் தெய்வேந்திரன்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கண்ணீர் அஞ்சலியாகச் செலுத்துகின்றோம்.

சாவகச்சேரி வணிகர் மன்றம்

(சி/2820)

---

## கண்ணீர் அஞ்சலி

கழகத்தின் கணக்காய்வாளராக பணிபுரிந்த

அமரர்

### ஆறுமுகம் தெய்வேந்திரன்

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.

(சி/2821)

---

## கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்.

### அமரர் ஆ. தெய்வேந்திரன்

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அவர்களின் மறைவினால் மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

பிரதிகூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களும்,
கூட்டுறவுப் பரிசோதகர்களும்.
யாழ் மாவட்டம்.

(42502)

---

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி யூப்பிட்டர் கல்வி நிலைய மாணவி செல்வி கிரிஜாவின் தந்தையாரான

### ஆறுமுகம் தெய்வேந்திரன்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆண்டு 9 மாணவர்கள்,
யூப்பிட்டர் கல்வி நிலையம்.

(சி/2819)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பழைய நேரமா; புதிய நேரமா?

இலங்கையில் புதிய நேரம் பழைய நேரம் என்று ஒரு புதிய வழக்கு கடந்த மே மாதம் 24ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் உள்ளது.

அரசாங்கம் வகுத்து அறிவித்தது புதிய நேரம்; உத்தியோக ரீதியாகக் கைக்கொள்ளப்படுவது அதுவே. ஆனால் பெரும்பாலான மக்கள் ஆண்டாண்டு காலமாகக் கைக்கொண்ட நேரத்தையே தமது சொந்த அலுவல்களின் போது பயன்படுத்துகிறார்கள்.

புதிய நேரம், பழைய நேரம் ஆகிய இரண்டில் மக்கள் எதனைக் கைக்கொள்கிறார்கள் என்பது குறித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய ஆய்வு மக்கள் முந்திய நேர முறையையே விரும்புகிறார்கள் என்பதனைத் தெளிவாக்கியுள்ளது.

நாட்டின் பாரம்பரியம், கலாசாரம் போன்றவற்றுக்கு அமையப் பெரும்பாலான மக்கள் தமது கடமைகளைப் பழைய நேரப்படியே தொடர்ந்தும் செய்து வருகிறார்கள் என்பது அந்த ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மின்சாரத் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக மணிக்கூட்டின் முள்ளை ஒரு மணித்தியாலம் முன்னுக்குத் தள்ளிவிட்டதால் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைத்ததா என்பது குறித்து இன்னும் சரியாகத் தெரியாது

பகல் நேரப் பொழுதைச் செயற்கையாக ஒரு மணித்தியாலத்தால் கூட்டியதால், சூரியன் அதற்கேற்றவாறு முன்னுக்கு உதிக்கவில்லை; உரிய நேரத்திற்கு முன்னர் மறைந்ததும் இல்லை.

மின்சாரத் தட்டுப்பாடு நீங்கிய பின்னரும், மின்சார வெட்டுத் தளர்த்தப்பட்ட பின்னரும், பழைய நேரத்துக்கு மாறுவதற்கு அரசாங்கம் பின்னடித்து வருவது புத்திசாலித்தனமல்ல. இப்படிச் செய்வது ஒரு புதுமை; மற்றவர்கள் செய்யாதது என்று அரசாங்க உயர் பீடத்தினர் கருதுகிறார்களா?

இது இயற்கையோடு விளையாடும் ஒவ்வாத விளையாட்டாகும். சூரியன் காலையில் உதிப்பதும் மாலையில் மறைவதும் இயற்கையின் செயற்பாடு. மனிதன் தான் நினைத்தவாறு கால நேரத்தை மாற்றி இயற்கையுடன் சவால் விடமுடியாது.

எனவே இலங்கை அரசு இயற்கையுடன் மூன்று மாதங்கள் விளையாடியது போதும் என்று எண்ணிக் கொண்டு —

விரைவில் பழைய நேரத்துக்கு— இயற்கையான நேரத்திற்கு — உண்மையான நேரத்துக்கு — மாற வேண்டும்.

உலகம் முழுவதும் இயற்கையோடு அண்டி, அதையொட்டி வாழும் போது, இலங்கையர் மட்டும் அதற்குப் புறம்பாக புதிய நேரம் வகுக்க முனைவது இருபதாம் நூற்றாண்டின் முதலாம் இலக்க வேடிக்கையாகிவிடும். நாட்டின் அல்லது நகரத்தின் பெயரை மாற்றுவது வேறு, நேரத்தை மாற்றுவது வேறு.

இலங்கை தனக்கென ஒரு தனிநேரத்தை வகுத்துச் செயற்படுத்துவதால் உலகளாவிய தொடர்புகளில் பல சிக்கல்களை உருவாக்கும். உடனடியாக அது தெரியாவிடினும் சிலகாலம் செல்ல உணரப்படும்.

நாட்டு மக்களுக்கும் பல சிக்கல்களும் சிரமங்களும் உண்டாகும்.

எனவே —

மக்களிடையே செய்யப்பட்ட ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு அரசு நேர மாற்ற கேலிக்கூத்தை நிறுத்துவதே நல்லது.

# வடக்கு - கிழக்கு யுத்தத்தை நடத்த நாள் ஒன்றுக்கு 12 கோடி ரூபா!

மணிலா, செப். 1

இலங்கையில் விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக வடக்கு - கிழக்கில் நடந்து வரும் யுத்தத்துக்கு இலங்கை அரசு ஒரு நாளைக்கு 12 கோடியே 60 இலட்சம் ரூபா செலவு செய்து வருவதாக இராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை அரசு ஒவ்வொரு ஆண்டும் வரவு - செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கி வருகிறது.

கடந்த 95 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் 3ஆயிரத்து 800கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. எதிர்வரும் 5 நவம்பரில் பட்ஜெட் தாக்கலாகவிருக்கிறது. இதில் இராணுவத்துக்கு 4 ஆயிரத்து 600 கோடி ரூபா ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு ஒரு நிமிடத்துக்கு 90 ஆயிரம் ரூபா செலவு செய்யப்படுகிறது.

இதன் படி ஒரு விடுதலைப் புலியை கொல்ல 20 லட்சத்து 50 ஆயிரம் வரை செலவாகிறது.

இதைப்பார்க்கும் போது ஒரு நாளைக்கு 5 விடுதலைப் புலிகளாவது கொல்லப்பட வேண்டும்; இராணுவத்தின் தரப்பிலும் எந்த இழப்பும் ஏற்படக்கூடாது.

அப்போதுதான் இராணுவத்தின் செலவைச் சரி செய்ய முடியும் என்றும் அந்த முன்னாள் அதிகாரி கூறியுள்ளார். (இ-3)

## வெள்ளித் தட்டில் பாண்!

வெள்ளித்தட்டில் பாண் ஒன்றை வைத்து, வாசனை கமழும் ஊதுபத்திகளை அதில் பற்ற வைத்து, மெழுகுவர்த்தியுடன் பிரதேச சபைக்கு வந்தார் ஓர் உறுப்பினர்!

இச்சம்பவம் ஹரிஸ்பத்துவ பிரதேச சபையில் இடம் பெற்றுள்ளது.

பிரதேசசபையின் உப — தலைவரான ஜயந்த மடுகல்லவ என்பவரே இப்படிச் செய்தவராவார்.

அந்தப் பாணில் ''பாண் அரசனின் 2 ஆவது ஆண்டு பூர்த்தி'' என்று எழுதப்பட்டிருந்தது.

பாணின் விலை 3.50 இல் இருந்து 7.50 ஆக உயர்ந்ததை ''கௌரவிக்கும்'' வகையிலேயே இதைச் செய்ததாக அவர் தெரிவித்தார். (இ-3)

# பொதுநல அமைப்பு புலமைப்பரிசில் திட்டம்

## விண்ணப்பம் கோரப்படுகிறது

கொழும்பு, செப். 1

பொது நல அமைப்பு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பட்டப் பின் படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நைஜீரியா ஆகிய நாடுகளில் அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகும் கல்வி ஆண்டில் பயில்வதற்கென இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கையர்கள் உயர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இது உதவும்.

அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி 35 வயதுக்கு உட்பட்டவர்களும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் சிறப்புப் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இம் மாத 23 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் மேலதிக விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-3)

# மாணவர் விசேட அடையாள அட்டைக்குரிய புகைப்படம்

## மறு அறிவித்தல் வரை ஒத்திவைப்பு

பாடசாலை மாணவர்களுக்கான விசேட அடையாள அட்டைக்குரிய புகைப்படங்கள் எடுப்பது மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாணம் ஆள் பதிவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

புகைப்படம் எடுப்பதற்குரிய புகைப்படச் சுருள்கள் தற்போது முடிவடைந்துவிட்டதே புகைப்படம் எடுப்பதை ஒத்திவைக்கக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## நல்லைப்பதிக்கு நடந்து போவோம்

நல்லைப் பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்
அல்லலுற் றுயர் தருமுழ் மெல்ல
அகன்று போம் நீ வா
கல் லொத்திடு மனங் கணத்தில்
கரைந்து போம் விரைந்து வா
நில்லன் பொடு நினைந்து நினைந்து
நீ நான் அறநின்று மகிழ்ந்து.

(நல்லைப் பதிக்கு)

— யோகர் சுவாமிகள்

## சீரடிகள் பணிந்தேன்

நல்லைத் திருப்பதியின் நாயகனே நற்றமிழர்
தொல்லை வினையகற்றும் தோகைமயில் வாகனனே
இல்லைத் துயரெனவே இங்குற்ற அடியார்கள்
புல்லின் பசுமையெனப் புளகாங்கித மடைய
நல்லைக் குமரா நவஉலகின் நாயகனே
முல்லைச் சிரிப்பழகா முக்கணனார் புத்திரனே
சொல்லுக் கடங்காச் சுகமடையவே உந்தன்
சீரடிகள் தான் பணிந்தேன் இன்று!..

நல்லூர் உற்சவகால சிறப்பு அம்சம்

## சேவாச்சிரமம் புலமைப்பரிசில்

கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டுக்கு கீழ்வாழும் பதினொரு மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

இதன் முதற் கட்டமாக இம் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-173)

## உப தபால் அதிபர் பரீட்சை ஒத்திவைப்பு

நேற்று நடைபெற இருந்த உப தபால் அதிபர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது. (இ-3)

## அஞ்சல் திணைக்கள வெற்றிடங்கள்

அஞ்சல் திணைக்களத்தால் கோரப்பட்ட விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பானது, அரச அதிகாரிகள் பொறுப்பற்ற விதத்தில் நடக்கத் தலைப்பட்டுள்ளார்களா? என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவித்துள்ளதுடன் பின்வரும் கேள்விகளையும் எழுப்புகிறது.

1. இந்த முடிவுபற்றி, பதிவு அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்பிய, விண்ணப்பதாரிகளுக்கு உத்தியோக பூர்வமாக ஏன் கடிதம் அனுப்பவில்லை?
2. விண்ணப்பங்களைக் கோருவதற்கு முன்பதாக, நியமனம் என்ன முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்க்கமாக ஆலோசித்து முடிவெடுக்கப்படவில்லையா?
3. திணைக்களத்தின் அறிவிப்பை நம்பி விண்ணப்பித்தவர்கள் சுமார் 5 அல்லது 6 ஆயிரமாக இருக்கும் என அனுமானிக்கலாம். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய திகதி முடிவுற்ற பின்னர், விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்திருப்பதால், விண்ணப்பதாரிகள் செலுத்திய பதிவுக் கட்டணம், தபாற்கட்டணம் என்பனவற்றை எந்தக் கணக்கில் சேர்ப்பது?
4, இரத்துச் செய்யும் முடிவு பின்னர் மேற் கொள்ளப்பட்டதாயின், இது நிர்வாகங்களுக்கிடையிலான பூசல் காரணமாகவா?

திருமுகம்

மேலும், அஞ்சல் திணைக்களமானது உள்நாட்டு இறைவரி, ரெயில்வே, சுங்கப் பகுதி என்பன போன்று, ஒரு தனியான திணைக்களமாகும். புறம்பான அமைச்சு ஒன்றின் கீழ் அஞ்சல் மா அதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்குவது. அஞ்சல் திணைக்கள நியமனங்கள் நேரடியாக அத்திணைக்களத்தினாலேயே மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன.

முந்திய காலத்தில் தொழிற் திணைக்களத்தின் வேலை வாய்ப்பு பரிமாற்று நிலையம் (Employment Exchange) செயற்பட்டு வந்தபோது கூட, அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றின் மூலமே நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

வேண்டுமானால் இப்போது விண்ணப்பித்தவர்கள் தொழில் வங்கிக்கும் விண்ணப்பித்துள்ளார்களா என்பதை உறுதி செய்து கொள்ளலாம் ஆனால் தெரிவு, முழுக்க முழுக்க அஞ்சல் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறின்றி தொழில் வங்கி விண்ணப்பதாரிகளிலிருந்து 100 பேரைத் தெரிவு செய்து தருமாறு கேட்பது அஞ்சல் திணைக்களத்தின் பாரம்பரியமான ஆட்சேர்ப்பு முறையைக் கைகழுவி விடுவதாக அமைவதோடு, விண்ணப்பதாரிகளை ஏய்க்காட்டிய செய்கையாகவே கருதவும் இடமளித்துவிடும்.

அஞ்சல் நலன்விரும்பி

கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## இதுதான் மனித தர்மமோ?

அண்மையில் நல்லூருக்கு அணித்தாக உள்ள ஓர் ஊரில் மாடு ஒன்று கண்ணிவெடியில் சிக்கியது. கால் முறிந்த அந்த மாட்டுக்கு அதனை வளர்த்தவர்கள் வைத்தியம் செய்வார்கள் என்றே அயலவர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் —

வர்த்தகமே உலகமான நிலையில், ஐயகோ, அந்த வீட்டுக்காரர் கால்நடை வைத்தியரிடம் ஓடுவதற்குப் பதிலாக, இறைச்சிக் கடைக்காரரிடம் ஓடினார். முறிந்து போன கால் உள்ள பகுதி போக மிகுதிக்கு நல்ல விலை பேசிப் பணம் பெறப்பட்டதாம்!

நல்லூரான் சந்நிதியில் பெருவிழாவும் விரதமும் நிகழுகையிற் கூட மனிதனின் மனிதாபிமானத்தை வியாபாரமும் பண ஆசையும் வென்றுவிட்டனவே!

பிற உயிர் மேல் கருணை காட்டுமாறு போதிக்கும் எமது சமயம் ஒரு புறம் தூர்ந்து போய் இருக்க —

அந்தச் சமயத்தைச் சேர்ந்த மக்கள் என்று பெருமை பேசும் நாம் எங்கே செல்கிறோம் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்பதால் இதனைப் பத்திரிகைக்கு எழுதுகிறேன். எங்கள் மனித தர்மம் இந்தளவுதான்!

கொல்லாமை, புலால் உண்ணாமை மட்டுமல்ல ஏனைய சமய மற்றும் தர்ம நீதிகள் யாவும் எழுத்தில் மட்டுமே; வாழ்க்கையில் இல்லை.

இந்த நிலை எங்களையும் எதிர்காலச் சந்ததியையும் எங்கே இட்டுச் செல்லப் போகிறதோ ...?

வி. எஸ். எஸ். நாதன்

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களே! போலியோ

## தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டது!

இந்த நல்ல செய்தியை மனதில் வைத்து ஐந்து வயதுக்குக் குறைந்த உங்கள் பிள்ளைகளுக்குத் தவறாது சொட்டு மருந்தைக் கொடுங்கள்!!

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால வளமான வாழ்வு உங்கள் கைகளிலேயே!!!

## நினைவில் வைத்திருங்கள்

இம் மாதம் 7 ஆம் திகதியை

PolioPlus


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: **01-04-1954**

ஆண்டவன் அடியில்: **24-08-1994**

திருமதி

## சந்திரவதனி சண்முகானந்தா

(வதனா)

(Teacher, N/Good Shepherd Convent, NuwaraEliya J/Veemankamam Maha Vidyalayam, Tellippalai)

திதி: **01-09-1996**

உங்கள் திடீர்ப் பிரிவு இன்றுடன் ஆண்டு இரண்டு பூர்த்தி எய்தினாலும் எம்மனக்கண் இன்று போல் பசுமையாகி விட்டதம்மா!

கணவன், மகன் மேல் வைத்த பாச உணர்வு, கருணை எமது மனக்கண் என்றும் விட்டகலாதம்மா!

உற்றார், உறவினர், சகோதரிகள் மேல் வைத்த பற்று உறவு என்றும் எல்லோர் மனத்திரையில் மேலோங்கி நிற்குதம்மா!

எல்லாவற்றிற்கும் மேலாக எமது பாசம் எப்பிறவியிலும் விட்டகலாதம்மா!

அம்மா, உங்கள் ஆத்மா சாந்தியடைய உடுவில் சிவஞானப்பிள்ளையார் கோவிலில் இன்று 01-09-96 அபிசேக ஆராதனை நடைபெறும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கணவன்: சண் மகன்: அகிலன்
சகோதரிகள்: மாலினிதேவி (U K)
கலாவாணி (U K)
நடராசாமாமா உற்றார், உறவினர்.

க. வா. சண்முகானந்தா
''சர்மிலம்'',
இலங்கை வங்கி ஒழுங்கை,
சுன்னாகம், (42305)


## மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்


# இலங்கை கேட்கின்ற.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளித்தார்.

அப்போதே விடுதலைப் புலிகள் அமைப்பு போன்ற அமைப்பை தடை செய்ய பிரிட்டனில் சட்டம் கிடையாது என்று அவர் கூறினார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதச் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு ஈடுபட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்தாலும், இலங்கையிலே அது தடை செய்யப்படாத அமைப்பு என்பதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

லண்டனைப் பெறுத்தவரை நாங்கள் தனிமனிதருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறோமே தவிர அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது இல்லை.

லண்டனில் இருக்கும் ஒருவர் தமிழரானாலும் சரி, வேற்றுப் பின்னணி கொண்டவரானாலும் சரி பயங்கரவாதத்தை ஊக்குவித்தோ, பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டோ எமது சட்டங்களை மீறுவாரேயானால், அப்போது அவர் கைது செய்யப்படலாம். அத்தகைய செயல்களை நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம். ஆனால் அதை நிருபிக்க சான்றுகள் வேண்டும். சான்றுகள் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் பயங்கரவாதச் செயல்களுக்காக நிதி சேகரிக்கிறது என்பதை நீதிமன்றத்தில் ஏற்கக் கூடிய வலுவான சான்றுகளுடன் நிரூபித்தால் அப்போது அத்தகைய செயல்களை நிறுத்த முடியும். அதைப் பற்றி சந்தேகமேயில்லை.

ஆனால் விடுதலைப் புலிகள் தாம் அப்படி நடந்து கொள்ளவில்லை என்றுதான் கூறுகின்றார்கள்.

தருமக்காரியங்கள் போன்றவற்றுக்குத்தான் தாங்கள் நிதி திரட்டுவதாக கூறுகின்றனர். அப்படிப்பட்ட காரியங்களுக்காக அவர்கள் நிதி திரட்டவில்லை என்பதைக் காட்ட சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இவையெல்லாம் மிகக்கஷ்டமான விடயம் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன்.

இதேபோல ஐ. ஆர். ஏ. இயக்கத்தால் எமக்கும் பிரச்சினை உண்டு. ஐ. ஆர். ஏ. இயக்கத்திலும் எந்த விதத்திலும் விடுதலைப் புலிகள் மாறுபட்டதில்லை.

பிரிட்டிஷ் சட்டப்படி எந்தவொரு அமைப்பின் மீதும் நடவடிக்கை எடுக்க இயலாது பயங்கரவாதி அல்லது பயங்கரவாதத்துக்கு ஆதரவு தரும் தனிநபர் ஆகியோர் மீதே நடவடிக்கை எடுக்க முடியும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-10)

## அத்தியாவசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இடம் பெயர்ந்த மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ-3)

## மனித உரிமை.,-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருப்புக்குரிய, கட்டாயமில்லாத ராஜதந்திர நடைமுறை (Optional Proctocol) என்ற சரத்து ஒன்று உண்டு.

அந்தச்சரத்தை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் கதிர்காமர் அமைச்சரவைக்குச் சிபார்சு செய்திருந்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விருப்புக்குரிய ராஜதந்திர நடைமுறையை ஏற்றுக் கொள்ளுவதை உறுதிப்படுத்தும் ஆவணம் ஒன்றை ஐ.நா. செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலியிடம் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்காண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு அறிவித்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட ஒப்பந்த சரத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தவொரு மனித உரிமை மீறலினாலேனும் பாதிக்கப்படும் எந்தவொரு தனிநரிடம்இருந்தும் முறைப்பாடுகள் தொடர்பான தகவல், பரிமாறல்கள் பெற்றுக் கொள்வதற்கு இந்த விருப்புக்குரிய ராஜதந்திர நடைமுறை வகை செய்கிறது. (அ-3)

## அரசாங்கத்துக்கு .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை அனுப்பிவைத்தார். அதில் உள்ளடங்கியிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக துரிதமானதும், ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கத் தவறிவிட்டதால் இந்த நாடாளுமன்றம் அரசின் மீது நம்பிக்கையை இழந்து விட்டதாக் இப்பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றுள்ள இப்பிரேரணைக்கான முன்னறிவித்தலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. றொனிடிமெல், சுசில் முனசிங்க, யோன் அமரதுங்க, விஜயபால மெண்டிஸ் ஆகிய எம். பிக்கள் சமர்ப்பித்தனர். (இ-3)

## கிழக்கின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் காயமடைந்தனர். 4 சிவிலியன்களும் காயமடைந்தனர்.

சித்தாண்டியில், கிளைமோர் கண்ணிவெடி தற்செயலாக வெடித்ததால் சிவிலியன் ஒருவர் கொல்லப்பட்டார், ஒரு சிப்பாயும் மற்றும்ஒரு சிவிலியனும் காயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை வெலிகந்த பொலிஸ் நிலைய காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு சிப்பாயும் ஒரு பொலீசாரும் ஊர்காவல் படையினரும் காயமடைந்தனர். (இ-3)

# கண்ணீர் அஞ்சலி

## பொன்னையா பிறின்ஸ்சீலன்

(சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளர்)

சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளரான பொன்னையா பிறின்ஸ்சீலன் 31-08-96 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-9-96) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

பணிப்பாளர், பணியாளர்,
அங்கத்தவர்கள்.

பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம்,
சுன்னாகம்.
(சி/2832)

# மரண அறிவித்தல்கள்

## கிருபைராஜா செல்லையா

அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வீமன்காமம், தெல்லிப்பளையை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல. 347, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய கிருபைராஜா செல்லையா (இளைப்பாறிய ஆசிரியர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை) 31-08-96 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் லில்லி அன்னமலரின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், நேசமலர், திருமதி ஜோதினி கோபாலபிள்ளை (இந்தியா), Dr. சுருபினி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. கோபாலபிள்ளையின் (இந்தியா) அன்பு மாமனாரும், ஹிறோஷனின் அன்புப் பாட்டனாரும், காலஞ் சென்ற திரு திருமதி செல்லையாவின் அன்பு மகனும், காலஞ் சென்ற செல்வி ஞானபூரணம், காலஞ் சென்ற கிருபைரத்தினம், ஜெயமணி, ராசமணி, பூமணி, கிருபைமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனை நாளை திங்கள் (2-09-96) காலை 10-00 மணிக்கு (பழைய நேரம்) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நல்லுடல் கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. செ. சுருபினி
(மகள்)

347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (42514)

## சோமநாதர் நாகலிங்கம்

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த சோமநாதர் நாகலிங்கம் 31-08-1996 அன்று காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், மல்லிகாதேவி, கணேசலிங்கம், இந்திராதேவி, மகேசலிங்கம், பாஸ்கரலிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-9-96) ஞாயிற்றுக்கிழமை ஏழாலையில் நடைபெறும்.

தகவல்;
நா. பாஸ்கரலிங்கம்
(மகன் - பாசன்)

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (சி/2831)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 01-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org